உசிதம் என்ற எண்ணத்துடன் கீழ்கண்ட நிலையில் அங்க அங்கமாக செயல்பட உத்தேஸிக்கப்பட்டுள்ளது.

1. ஸம்ஸ்கார இடத்தை சுற்றி நான்கு புறமும் சுற்றுச்சுவர் எடுத்து பாதுகாப்பு ஏற்பாடு செய்து நுழைவாயிலில் ஓர் இரும்பு கதவு அமைப்பது.

2. தற்சமயம் உள்ள ஸம்ஸ்கார இடத்தில் மழை வெய்யிலிருந்து பாதுகாத்து சிறந்த முறையில் தகனம் செய்ய நிரந்தர கட்டிடம் கட்டுதல்.

3. தற்பொழுது உள்ள கிணற்றை மாற்றியமைத்து புதிதுபடுத்துதல்.

4. மெயின் ரோடிலிருந்து தகன இடத்திற்கு செல்லும் வழியை சமன் செய்தல், பாதை அமைத்தல்.

5. அங்குள்ள குளியலறை மற்றும் கழிப்பிடங்கள் உபயோகப்படுத்த வசதியாக தூய்மையாக வைத்திருக்க உதவுதல்.

மேற்கண்ட முதற்கட்டமானதும் உடனடியானதுமான இந்த செயல்பாட்டிற்கு குறைந்தபட்சமாக ரூபாய் பத்து லட்சம் வரை தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

இரண்டாம் நாளிலிருந்து தொடங்கி பன்னிரெண்டாம் நாள் வரையான நித்யகர்மாக்கள் செய்யும் வசதிக்காக கீழ்கண்ட முறையில் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. தேவையான நிலம் கொள்ளிடக்கரையிலேயே ஆர்ஜிதம் செய்வது.

2. தனித்தனியே காரியம் செய்யும் ஒவ்வொரு இடமும் குறைந்தது 450 சதுர அடியிலிருந்து 550 சதுர அடிக்கு குறையாமல்: தனித்தனியே நித்ய கர்மாதிகளை செய்ய வசதியான சூழலில் முதல் தவணையாக 5 தனித்தனி கட்டிடங்கள் நிர்மாணித்தல். அதன்பிறகு தேவைக்கேற்ப அதிகரித்துக் கொள்ளுதல்.